## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 434/2016

நாள் 19.08.2025

PW1 – கருப்புசாமி

த/பெ – முதலி கருப்பன் (எ) கருப்பசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2025)**

### குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா A,B செட்டியூல் சொத்துக்கள் செம்யிநல்லூர் கிராமத்திலும், C செட்டியூல் சொத்து தேக்கம்பட்டி கிராமத்திலும் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா முதலி கருப்பனின் தாத்தா பெயர் அம்மாசி வலையன் என்றால் சரிதான். அந்த அம்மாசி வலையனுக்கு பாட்ட வலையன், ரங்க வலையன் என்ற இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அதில் பாட்ட வலையனுக்கு முதலி கருப்பன், சிந்த கருப்பன் என்ற இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அம்மாசி வலையனுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் 3.85 ஏக்கர் சொத்து இனாமாக கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன்படி செம்பியநல்லூர் கிராம ரீ–சர்வே எண். 144–க்கு பட்டா எண்.167 என்று அம்மாசி வலையன் பெயருக்கு பட்டா வா.சா.ஆ.7 வழுங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின் படி சர்வே எண்.152–ல் 2.63 ஏக்கர் சொத்தை பாட்ட வலையனும், ரங்க வலையனும் சேர்ந்து கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அம்மாசி வலையன் 1957–ம் ஆண்டிலேயே இறந்து போய்விட்டார். மேற்படி 3.85 ஏக்கர் சொத்தில் வந்த வருமானத்தை கொண்டு தான் பி.வா.சா.ஆ.1–ல் கண்ட சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

2. அம்மாசியம்மாள் என்பவர் எனது தாயார். எனது தாயார் அம்மாசியம்மாள் 07.10.1964-ம் தேதியில் சர்வே எண்.143-ல் 74 சென்ட்டை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த சர்வே எண்.143-ல் மொத்தம் 7.36 ஏக்கர் பரப்பு கொண்டது. அந்த 74 சென்ட் சொத்தை எனது அப்பா முதலை கருப்பனும், எனது சித்தப்பா சிந்த கருப்பனும், எனது தாத்தா பாட்ட வலையனும் சேர்ந்து தான் எனது அம்மாவிற்கு கிரையம் கொடுத்தார்கள். அந்த 7.36 ஏக்கர் பரப்பு கொண்ட சொத்தானது அவர்களுக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும், அந்த கிரைய பத்திரத்தில் பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் 7.36 ஏக்கர் சொத்தில் பொதுவில் 1/10 பங்கு சொத்தை கிரையம் கொடுப்பதாக கண்டு தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.144-ல் உள்ள 3.85 ஏக்கரில் பொதுவில் 1/4 பங்கு சொத்தை ரங்கவலையன் மகன் முருகன் என்பவரிடமிருந்து எனது அம்மா அம்மாசியம்மாள் கடந்த 24.11.1977-ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்திலும் பிதுராஜ்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்தில் பொதுவில் 1/4 பங்கு சொத்தை கிரையம் கொடுப்பதாக தான் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. எனது அப்பா முதலை கருப்பன் 11.09.1968-ம் தேதியில் சர்வே எண்.143-ல் உள்ள 7.36 ஏக்கரில் பொதுவில் 1/10 பங்கு சொத்தை காளியம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த சொத்தை சர்வே எண்.144, 143 மற்றும் 152 பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் எனது அப்பா கிரையம்

பெற்றார் என்றால் இல்லை. தாவா C செட்டியூல் சொத்தை எனது அப்பா கடந்த 09.02.1972–ம் தேதியில் பி.வா.சா.ஆ.5 மூலம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த சொத்தை கிரையம் பெறும் போது நாங்கள் கூட்டுக்குடும்பமாக தான் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது எனது அப்பா கூட்டுக்குடும்ப தலைவர் என்ற முறையில் அவரது பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா C அட்டவணை சொத்தில் மொத்தம் 5.27 ஏக்கர் பரப்பு கொண்டது என்றால் சரிதான். அதேபோல் பி.வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெறப்பட்ட 2.63 ஏக்கர் சொத்தில் ரங்க வலையன் அவருக்குரிய 1.75 ஏக்கர் சொத்தை ஆசிர்வாதம் என்பவருக்கு கிரையம் கொடுத்து விட்டார். அந்த ஆசிர்வாதத்திடம் இருந்து தான் எனது அப்பா முதலை கருப்பன் கடந்த 11.05.1972–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.6 மூலம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நாங்கள் கூட்டுக்குடும்பமாக தான் இருந்து வந்தோம் என்றால் சரிதான். அதேபோல் எனது அப்பா பி.வா.சா.ஆ.7 கிரைய பத்திரம் மூலம் மேட்டுப்பாளையத்தில் ஒரு பகுதி சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அதேபோல் மற்றொரு பகுதி சொத்தை பி.வா.சா.ஆ.8 கிரைய பத்திரம் மூலம் 04.02.1975–ம் தேதியில் குடும்ப தலைவர் என்ற முறையில் எனது அப்பா கிரையம் பெற்றார் என்றால் அந்த சொத்தை எனது அப்பா தனியாக கிரையம் பெற்றார். மேற்படி சொத்துக்கள் அனைத்தும் எனது அப்பா கிரையம் பெறும் போது நாங்கள் கூட்டுக்குடும்பமாக தான் இருந்து வந்தோம் என்றும், அதனால், கூட்டுக்குடும்ப தலைவர் என்ற முறையில் எனது அப்பா பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

4. அதேபோல் எனது அப்பா 22.12.1978–ம் தேதியில் தாவா C செட்டியூல் சொத்தில் மீதமுள்ள சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் கண்ட செம்பியநல்லூர் கிராமம் கந்தம்பாளையத்தில் குடியிருக்கும் பாட்டான் மகன் முதலி கருப்பன் (எ) கருப்பசாமி என்பவர் எனது அப்பா பெயர் தான். எனது அண்ணன் பெயர் முத்துச்சாமி என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் சாட்சியாக காட்டப்பட்டுள்ள கருப்பசாமி மகன் முத்துச்சாமி என்பவர் எனது அண்ணன் என்றால் இல்லை. அந்த 22.12.1978–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ.9–ல் உள்ள கருப்பசாமி மகன் முத்துச்சாமி என்பவர் எனது அண்ணன் என்றும் அவர் தான் அந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்ள என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும் வா.சா.ஆ.9 கிரைய ஆவணம் பதிவு செய்த போது எனது அப்பாவுடன், எனது அண்ணன் முத்துச்சாமியும் உடன் சென்று கிரையம் வாங்கினார்கள் என்றும், அதனால் தான் முத்துச்சாமி அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9–ன் அசல் கிரைய பத்திரம் என் வசம் இல்லை. அந்த அசல் கிரைய பத்திரம் என் வசம் தான் இருந்து வருகிறது என்றும், அந்த கிரைய பத்திரத்தில் எனது அண்ணன் முத்துச்சாமி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றும், அந்த அசல் பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதற்காக வேண்டி தான் அசல் கிரைய பத்திரம் என் வசம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா அந்த அசல் கிரைய பத்திரத்தில் ஏற்கனவே நடந்த முன் வழக்குகளில் தாக்கல் செய்துள்ளார், ஆனால் அது எந்த வழக்கு என்று எனக்கு தெரியாது. எனது அண்ணனை முத்தன் என்றும், முத்துச்சாமி என்றும்,

சாராயக்காரர் பொன்னான் என்றும் அழைப்பார்கள். எனது அண்ணன் 30.07.1992–ம் தேதியில் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.08.19 17:47:15 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**